**சுருக்கம்**

பள்ளிக் கல்வித் துறை - கருணை அடிப்படை பணி நியமனம் – பணியாளர் தொகுதி (மறைந்த) திரு கே.எம்.உமாபதி என்பவரின் மகன் திரு உ.குமரேசன் - இளநிலை உதவியாளர் பணியில் நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்[ப.க.4(1)] துறை**

அரசாணை (1டி) எண்.163

நாள் 09.11.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம், ஐப்பசி 23
படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த(எம்)த் துறை, நாள் 01.08.2018.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.050542/ஜே/இ1/2023, நாள் 08.09.2023.

-------

**ஆணை**:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், இராணிப்பேட்டை மாவட்டம், நரசிங்கபுரம் மின்னல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்த திரு கே.எம்.உமாபதி என்பவர் 22.07.2015-ம் நாளன்று பணியிலிருக்கும் பொழுது இறந்துவிட்டார் எனவும், அவரது மகன் திரு உ.குமரேசன் என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்க கோரியுள்ளதன் தொடர்ச்சியாக, அவர் கருணை அடிப்படை பணி நியமனத்திற்கான அனைத்து நிபந்தனைகளையும் நிறைவு செய்துள்ளதன் அடிப்படையில், அன்னார், தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ், பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார் என்றும் தெரிவித்து தனியரின் பணியினை 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தனியர்களின் பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெறத் தேவையில்லை என்பதால், இராணிப்பேட்டை மாவட்டம், நரசிங்கபுரம் மின்னல் ஊராட்சி

ஒன்றிய தொடக்கப் பள்ளியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்த திரு கே.எம்.உமாபதி என்பவரின் மகன் திரு உ.குமரேசன் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிபுரிந்து வரும் நிலையில், அன்னாரது பணியினை அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்யலாம் என அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதும் இருப்பின், அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
(பணிப்பதிவேடு மற்றும் அசல் ஆவணம்)
தனியர் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

CamScanner

இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

நி.மு.எண்.511/அ1/2020 நாள். .02.2024

பொருள்: தமிழ்நாடு பள்ளிக்கல்வி - அமைச்சுப்பணி - இராணிப்பேட்டை மாவட்டம் - கூடலூர், அரசு மேல்நிலைப் பள்ளி - இளநிலை உதவியாளர் திரு.உ.குமரேசன் என்பாருக்கு பணிவரன்முறை ஆணை நகல் அனுப்புதல் - சார்பு.

பார்வை:
1. அரசாணை(1டி)எண்.163 பள்ளிக்கல்வித் (ப.க.4(1))துறை நாள்.09.11.2023.
2. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.050542/ ஜே/இ1/ 2023, நாள்.22.01.2024.

---

இராணிப்பேட்டை மாவட்டம், கூடலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.உ.குமரேசன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை ஆணை பார்வை(2)இல் காணும் செயல்முறைகளின்படி இவ்வலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

இவ்வாறு பெறப்பட்ட ஆணை நகல் மற்றும் அசல் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேலும் சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவினை மேற்கொள்ள சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் அறிவுறுத்தப்படுகிறார். பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் இவ்வலுவலகம் அனுப்பி வைக்குமாறு தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு-
1. அசல் பணிப்பதிவேடு
2. பணிவரன்முறை ஆணை

13/3/24

முதன்மைக் கல்வி அலுவலர்க்காக,
இராணிப்பேட்டை.

13/3/24

பெறுநர்

தலைமையாசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
கூடலூர், இராணிப்பேட்டை மாவட்டம்.

நகல்

மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை),
இராணிப்பேட்டை.(தகவலுக்காக அனுப்பப்படுகிறது)

CamScanner